**சுருக்கம்**

தொழில் துறை - 2022-2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு - தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் - அரியலூர் புதிய சிமெண்ட் ஆலையில் உற்பத்தி ஆகும் சிமெண்ட்டை பழைய ஆலையின் சிமெண்ட் கொள்கலன்களுக்கு (Cement silos) கொண்டு செல்லும் அமைப்பு (Cement conveying system) ஒன்று 3.50 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும் - அனுமதி ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.டி.2) துறை**

அரசு ஆணை (டி) எண்.39

நாள் : 25.04.2022
சுபகிருது - சித்திரை - 12
திருவள்ளுவர் ஆண்டு 2053

ஆணை:

2022-2023ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

"அரியலூரில் உள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் புதிய சிமெண்ட் ஆலையில் "வலிமை" என்ற பெயரில் புதிய உயர்ரக சிமெண்ட் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த "வலிமை" சிமெண்டை, பழைய ஆலையிலும் சேமித்து மூட்டைகளாக பேக்கிங் செய்து விற்பனை செய்வதற்கு ஏதுவாக, பழைய ஆலையின் சிமெண்ட் கொள்கலன்களுக்கு (Cement silos) கொண்டு சேர்க்க, புதிய "சிமெண்ட் கொண்டு செல்லும் அமைப்பு" (Cement conveying system) ஒன்று, 3.50 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்".

2. மேற்காணும் திட்டத்தினை, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு, நடைமுறைகளில் உள்ள விதிகளைப் பின்பற்றி, குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்த அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தின் வளர்ச்சி குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் பணிக்கப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. கிருஷ்ணன்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்,
5-வது தளம், ஆவின் இல்லம்,
எண்.3A, பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை, நந்தனம், சென்னை- 600 035.
நகல்
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009,
தொழில் (அ.ந.மு2/வ.செ.தி.1) துறை, சென்னை - 600 009.
இ.கோ/உ.நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 25/4/2022
25.4.2022